# மலரும் நினைவுகளைத் திரும்பிப் பார்க்கும் வண்ணம் மிகச் சிறப்பாக நடைபெற்ற வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் 20வது ஆண்டு ஒன்றுகூடல்





வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 20வது வருடாந்த ஒன்றுகூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி) Scarborough Milliken Park இல் பல நூற்றுக்கணக்கான மக்களுடன் மிகச் சிறப்பாக நடை பெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் நலன் விரும்பிகளும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் கல்லூரிப் பருவத்தில் நடைபெற்ற மறக்கமுடியாத பசுமையான நினைவுகளை மனதில் தாங்கிக்கொண்டு வந்து குவிந்திருந்தனர். முன்னதாகவே வந்தவர்கள் தங்களுடன் படித்த தோழர்கள் வருவார்களா என்று வழி மேல் விழி வைத்து எதிர்நோக்கியபடி காத்திருந்தனர். தங்கள் தோழர்கள் வந்தவுடன் தோள் சாய்ந்து அன்போடு கட்டியணைத்தபடி உற்சாக வரவேற்பு வழங்கினார்கள்.






சிலர் ஆரத்தழுவி ஒருவருக்கொருவர் நலம் விசாரித்தார்கள். பல்வேறு ஆண்டுகளுக்குப் பின்னர் சந்தித்தவர்கள் கண்ணீர் மல்க நலம் விசாரித்தது பிற மாணவர்களை உணர்ச்சிப் பெருக்கெடுக்க வைத்தது. பழைய மாணவர்கள் தங்களுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு மரியாதை நிமித்தமாகக் குரு வணக்கம் செலுத்தியதோடு தமது கல்லூரி நினைவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

கல்லூரியின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கள் அமரர்கள் திரு. நாகையா கந்தவேள் மற்றும் திரு தர்மலிங்கம் கந்தையா அவர்கள் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்விற்குச் சங்கத்தின் தலைவர் திரு. சி.இளஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் பிரதி அதிபருமான திரு. பொன் ஈசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆசிரியை திருமதி ரெறீஸ் அலெக்ஸாண்டர் அவர்களும் பிரதம மத்தியஸ்தராக முன்னாள் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு பே.பொன்னுச்சாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கல்லூரியின் பழைய மாணவிகள் திருமதிகள் கலா செல்வம் சோதிமலர் சிவா கவிதா காந்தன் ஆகியோர் இனிமையாக கல்லூரிக் கீதம் பாடினர். கௌரவ விருந்தினர் திரு. பே. பொன்னுச்சாமி அவர்கள் சங்கக் கொடியை ஏற்றினார். அடுத்து விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. விளையாட்டு நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் திரு திருமதி தனபாலசுந்தரன் ஆகியோர் மிகச்சிறப்பாக நெறிப்படுத்தினர். சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவையொட்டி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் செயலாளர் திரு. சு. சிவகுமார் அவர்களது நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.






சங்கத்தினால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சியின் மூலம் தங்களுடன் படித்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் கல்லூரி ஊழியர்கள் அனைவரையும் பார்க்க முடியும் என்பதால் மகிழ்ச்சி தருகிறது. கல்லூரியில் பயின்ற காலத்தில் படித்த பாடங்கள் நினைவுக்கு வருவதில்லை. ஆனால் கல்லூரிப் பருவத்தில் செய்த குறும்புத்தனங்கள் மட்டும் ஞாபகத்திற்கு வருகிறது. கல்லூரியில் படித்து முடித்து வெளியே வந்து ஆண்டுகள் கடந்தாலும் மறக்கமுடியாத மலரும் நினைவுகளை திரும்பிப் பார்க்கும் வண்ணம் இந்நிகழ்வை ஒழுங்கு செய்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களையும் உணவுத்தயாரிப்பு மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு உதவிய தன்னார்வத் தொண்டர்களையும் வருகை தந்திருந்த அனைவரும் பாராட்டிச்சென்றனர்.

